# மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2024

01. மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை– 2024, மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கமைய, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்று அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை **03/2016** இன் அடிப்படையில் **PL** சம்பளத் தொகுதியின் ஆரம்ப மட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர் மற்றும் **MN-01-2016** சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்களுக்கு இப்பரீட்சைக்கு தோற்றலாம். இப்பரீட்சை கீழ் குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படுவதுடன், அந்நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாதவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் அல்லது ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்து செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி பரீட்சை நிலையம் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |

03. (I) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அவரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(II) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

04. பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய மொழி மூலம் :- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் அடிப்படையில் ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் மாத்திரம் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

05. **சம்பளம்** :- 2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் III, II மற்றும் I ஆகிய வகுப்புகளுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் : . MN 2-2016 சம்பள அளவுத் திட்டத்திற்கமைய ரூபா. 28,940 - 10X300 - 11X350 - 10X560 - 10X660 - ரூபா. 47,990 ஆவதுடன் ரூபா. 31,940/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும் ரூ. 35,790/- ஐக் கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அரசினால் அரச அலுவலர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**குறிப்பு:** - நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அதிகரிப்பு சட்டதிட்டங்களுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு நலன்கள் வழங்கப்படும்.

06. **சேவை நிபந்தனைகள்** :-

(I) நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

(II) மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014-06-30 ஆந் திகதிய 1869/4 ஆம் இலக்க அதிவிசட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தரம் III இலுள்ள பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுவர்.

(III) இப்பரீட்சையில் வெற்றி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும். மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(IV) இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனம் பெறும் பரீட்சார்த்திகள் இடமாற்றங்களுக்கும் மத்திய மாகாணத்தில் எப்பகுதியிலேனும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(V) நியமனம் பெறும் சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் 03 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். ஆனாலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விசேடமானதொரு காரணத்துக்காக அக்காலம் முடிவடைவதற்குள் அலுவலரை இடம் மாற்றுவதற்கு அவசியமானால் அதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(VI) பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் **ஏனைய** அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிடல் வேண்டும்.

07. **நியமனத்தின் பொருட்டு தெரிவு செய்யும் முறை** : -

மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்று அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் அடிப்படையில் PL சம்பளத் தொகுதியின் ஆரம்ப மட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர் மற்றும் MN-01-2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்கள் மாத்திரமே இப்போட்டிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்களின் விருப்பின் படி ஒரு மொழி ஊடகத்தில் மாத்திரமே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு ஐம்பது (50%) வீதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு புள்ளிகளைப் பெற்றிறாத விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் நியமனம் பெறுவதற்கு எவ்வகையிலும் தகுதி பெற மாட்டார்கள். திறமை ஒழுங்கு அடிப்படையில் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

08. **தகைமைகள்**: - இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் கொண்டிருக்கவேண்டிய தகைமைகள் :

(I) மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்று அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் அடிப்படையில் PL சம்பளத் தொகுதியின் ஆரம்ப மட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர் மற்றும் MN-01-2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அலுவலராக இருத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருடகாலப்பகுதியில் முனைப்பாக மற்றும் திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்புகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும். அது தொடர்பில் திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(III) க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் மொழி/ இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்பகணிதம்/ வர்த்தக எண்கணிதம் உள்ளடங்கலாக <u>ஒரே அமர்வில்</u> இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல்.

(IV) பரீட்சார்த்தியானவர் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்

(V) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(VI) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட சகல தகைமைகளும் 2024.07.01 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு :

(1) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டு காலவெல்லையாக கணக்கிலிடப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/ அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான 05 ஆண்டு காலவெல்லைக்காக கணக்கிலிடப்படமாட்டாது.

(2) விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் நியமனம் பெறும் பொருட்டு திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

(3) பகுதியளவு தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் பணிகளுக்காகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்கத்தினால் விசேடமாக பயிற்சியளிக்கப்பட்டுள்ள எந்தவொரு தரத்திலுமுள்ள ஊழியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவார். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள பொதுச் சுகாதார ஊழியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெறமாட்டார்கள். எவரேனும் ஊழியர் ஒருவர் தான் தகுதியானவரா அல்லது தகுதியற்றவரா என சந்தேகம் ஏற்படுமிடத்து, அது தொடர்பில் விண்ணப்பதாரர், திணைக்களத் தலைவர் ஊடாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் அது தொடர்பில் விசாரித்தல் வேண்டும்.

அதேபோல் இவ் விடயம் தொடர்பாக எவரேனும் ஊழியர் ஒருவரின் தகைமை தொடர்பில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் விசாரிக்கும் போது சம்பளத் திட்டத்துடன் ஊழியரின் பணிகள் தொடர்பான முழுமையான விபரமொன்று குறித்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அந்தப் பணியை செய்வதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் அத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பின் அந்தப் பயிற்சியின் தன்மை மற்றும் காலப் பகுதி என்பவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(4) அரசாங்க சேவையில் தற்காலிக, அமய ஊழியர்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளின் ஊழியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர்களாவார்கள்.

(5) பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தாம் திருப்தியுறும் வகையில் இதில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யாமல் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் போதிய அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பினும், நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

09. **விண்ணப்பங்கள்** :

(அ)

(I) A4 அளவிலான (21x29 செ. மீ.) (சாதாரண ஹாப் சீட்) ஒரு தாளினை பயன்படுத்தி இலக்கம் 01 தொடக்கம் 03 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 04 இலிருந்து மிகுதி வரையானவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

(II) விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும். இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரிப் படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பமானது தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பக்கூடாது. நிழற்படப் பிரதிகள் அல்லது முற்பிரதிகள் அனுப்பப்படக்கூடாது என மேலும் அறிவிக்கப்படுகின்றது. உரிய தகவல்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகக் கொடுக்கப்படல் வேண்டும். முழுமைப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது. பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு பரீட்சார்த்தியினால் முழுமைப்படுதப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பமானது நிராகரிக்கப்படலாம்.

(III) விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (www.psc.cp.gov.lk)

(IV) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நியமனக் கடிதம் வழங்கப்படும் போது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதுலெழுத்துக்களுடனான பெயரின் அடிப்படையிலே வழங்கப்படும். ஆகவே, மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள உதாரணத்திற்கமைய பெயரானது சரியாக எழுதப்படல் வேண்டும். நியனமங்கள் வழங்கும்போது பெயரினை மாற்றவோ அல்லது பெயரில் ஒரு பகுதியினை உள்ளடக்கவோ அல்லது ஒரு பகுதியினை அகற்றவோ அனுமதிக்கப்படமாட்டாது.

(V) இப்பரீட்சைக்கு விசேட தேவைகளையுடைய விண்ணப்பதாரிகள் தோற்றுவதாயின், அது தொடர்பில் விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும் மற்றும் தங்களுடைய விசேட தேவைகள் தொடர்பாக வைத்திய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) பரீட்சைக் கட்டணம் **:-** பரீட்சைக் கட்டணம் ரூபா. **600** ஆகும். இப்பணத்தை மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் மத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். <u>பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள், முத்திரைகள். தபால் அல்லது உப தபால் அலுவலகங்களில் கட்டணத்தை செலுத்தி பெறப்படும் பற்றுச் சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.</u> எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(இ) விண்ணப்பங்கள் பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்பட்டு <u>**2024.07.01**</u> ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ

செயலாளர்,<br>
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,<br>
இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி"

என்ற முகவரிக்கு தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஒரு சான்றிதழ் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். **2024.07.01** ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

என்பனவையே பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பம் அனுப்பிய பின்னர் அது தொடர்பாக ஏற்படும் எந்தவித மாற்றங்களும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரர்கள் யாவருக்கும் நேரசூசியின் பிரதி ஒன்றுடன் பிரவேச அட்டையும் அனுப்பப்படும். இதற்கு ஒத்ததாக, அதனை அறிவிப்பதற்கு பத்திரிகை அறிவித்தலானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். அவ்வாறான பிரவேச அட்டையின்றி பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர், தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தினை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் முன்வைக்க வேண்டும். தேவையேற்படின் சமர்ப்பிப்பதற்கு ஏதுவான வகையில், உம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தினது நிழற்படப் பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயார் நிலையில் வைத்துக் கொள்ளல் மிகவும் பிரயோசனமாக அமையும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர் தம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்பித்தல் வேண்டும். இன்றேல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. பரீட்சைக்கு தோற்ற அனுமதியளித்தல் தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. பின்னர் ஒரு கட்டத்தில் அது நுண்ணியதாக ஆராயப்படும்.. விண்ணப்பதாரருக்கு பிரவேச அட்டை அட்டை ஒன்றை விநியோகித்தல் அவர் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது

13. பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது **www.results.exams.gov.lk** என்ற இணையதளத்தினூடாக அறிவிக்கப்படும்.

14. **ஆள் அடையாளம்** : - இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

    (அ) தேசிய ஆள்அடையாள அட்டை
    (ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
    (இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். மேலும் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான விதத்தில் திணைக்கள தலைவர் கடமை லீவு வழங்குதல் வேண்டும். பிரயாணக் கட்டணங்கள் செலுத்தப்படமாட்டாது.

16. பொய்யான **தகவல்களுக்கான தண்டனை** - விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையற்றவையென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

17. பரீட்சைத் திட்டம் - பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன :

| பாடம் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தியெய்த வேண்டிய புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை | 100 | 40 | 02 ½ மணித்தியாலங்கள் |
| உளச்சார்பு | 100 | 40 | 01 மணித்தியாலம் |

17.1 சகல எழுத்துமூல விடைத்தாள்களிலும், எழுத்துப்பிழைகள் மற்றும் தெளிவற்ற கையெழுத்து ஆகியவற்றுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும். பரீட்சார்த்தியின் விருப்பின்படி ஒரு மொழி ஊடகத்தில் மாத்திரமே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் ஐம்பது (50%) சதவீதமேனும் அதாவது மொத்த புள்ளிகள 100 அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக்கொண்டுள்ள, அத்துடன் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் திறமை ஒழுங்கு வரிசை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

17.2 இரண்டு பாடங்களினதும் மொத்தப் புள்ளிகள் 100 அல்லது அதற்கு அதிகமாக இல்லையெனின், விண்ணப்பதாரர் பரீட்சையில் சித்தியடைந்ததாக கருதப்பட மாட்டார்.

18. பாடவிதானம்

<u>மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை (காலம் : 2 ½ மணித்தியாலங்கள்) :</u>

ஆபேட்சகரின் எண்ணங்களை வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோவை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க கடிதத்தினை வரைதல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சார்த்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ் வினாத்தாள் கொண்டிருக்கும்.

அலுவலக ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் விதம் மற்றும் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய கடிதம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் தொடர்பிலான அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் போன்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரின் கடமைகள் குறித்து பரீட்சார்த்தியின் அறிவினை சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள்

நினைவூட்டல் நாட்குறிப்பு, பண உறுதிச் சீட்டுகள், நகர்வுத் தாள்கள், வரவுப் பதிவேடு, திகதியிடும் முத்திரை, முத்திரை, இறப்பர் முத்திரை மற்றும் தபால் பை, மற்றும் அவற்றின் பயன்பாடு போன்ற அலுவலகத்தில் பிரயோகிக்கப்படும் முறைமைகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவினைச் சோதிப்பதற்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

பகுதி I : மொழித்திறன், கிரகித்தல் ஆகியவற்றைச் சோதிப்பதற்கென கட்டமைக்கப்பட்ட வினாக்கள், சுருக்கம் மற்றும் கட்டுரை எழுதுதல்
(1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் - 50 புள்ளிகள்)

பகுதி II : முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான உளச்சார்பினைச் சோதிப்பதற்கான ஒரு விடயம், கூற்று அல்லது பந்தியினை அடிப்படையாகக்கொண்டு குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட வினாக்கள் மற்றும் கட்டுரைகள். (1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும்- 50 புள்ளிகள்)

<u>உளச்சார்புப் பரீட்சை : (காலம் : 1 மணித்தியாலம்)</u>

பரீட்சார்த்தியின் எண்கள் தொடர்பான திறன்கள், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது விவேகம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள் தொடர்பான பாடங்களை இவ் வினாத்தாள் உள்ளடக்கும்.

இது 50 பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடை மாதிரியையும் உள்ளடக்கும்.
காலம் 01 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

19. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

20. சிங்களம், தமிழ் மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

கை/இ: குமுதினி எஸ் பிரேமசந்திர,
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2024 ஜூன் மாதம் ...... ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி